IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 98/2019 |
| | | P/W's | : | 1 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | Murugan | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **20-04-2023**

குறுக்கு விசாரணை (வா.சா.1 ஆஜர்.) சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதிகள் தரப்பில்) : 20-04-2023**

கருப்பன் என்பவரின் வாரிசு நீங்கள் தான் என்பதற்கு உங்கள் தரப்பில் கருப்பனின் வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் நீங்கள் கருப்பனின் வாரிசு அல்ல என்று மறுக்கப்பட்டுள்ளதால் உங்கள் தரப்பில் தான் கருப்பனின் வாரிசு நீங்கள் ஆவீர்கள் என்று நிருபணம் செய்திட வேண்டியுள்ளீர்கள் என்றால் நான் தான் கருப்பனனின் வாரிசு ஆவேன். வா.சா.ஆ.3ன்படி தாவா சொத்து பிரதிவாதிக்கு எழுதி கொடுக்கப்பட்ட விபரம் கடந்த 25.01.2012ம் தேதியில் தெரிந்திருந்தும், வழக்குரையில் உங்கள் தரப்பில் கடந்த 25.01.2019ல் தான் பிரதிவாதிக்கு எழுதி கொடுக்கப்பட்ட சொத்து பத்திரம் குறித்து தெரியவந்ததாக வழக்கில் பொய்யாக சொல்லியுள்ளீர்கள் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல.

கடந்த 09.03.1987ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தை பொறுத்து வழக்குரையில் உங்கள் தரப்பில் எவ்வித பரிகாரமும் கேட்கப்படாத நிலையில், இந்த தாவா உங்களுக்கு எந்தவித பரிகாரமும் கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. உங்கள் தரப்பில் தாவா சொத்து பஞ்சமி நிலம் என்று சொல்வதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்பட்டு, நிருபணம் செய்யப்படவில்லை என்றால் அது சரியல்ல. தாவா சொத்திற்கு அருகில் நான்குவழிச்சாலை உருவாகுவதால் தாவா சொத்தை பொறுத்து பிரதிவாதியிடம் அதிக தொகைக்கு கேட்டு, அதற்கு

பிரதிவாதி மறுத்ததால் உங்களால் பொய்யாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அது சரியல்ல. பிரதிவாதி வீட்டிற்கு நீங்களும், சில நபர்களும் சேர்ந்து கிரைய ஆவணத்தை மாற்றி கொடுக்குமாறு கேட்டுள்ளீர்கள் என்று சொன்னால் அது சரியல்ல, ஆனால் பிரதிவாதி தான் என்னிடம் வந்து கிரைய பத்திரத்தை ஒப்படைத்து விட்டு ஆவணங்களையும் ஒப்படைத்துவிட்டு சென்றுவிட்டார்.

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி